# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்




# அவர்களின் எதிரி ஆங்கிலம் இல்லை!

சுப.வீரபாண்டியன்




## கிண்டியிலிருந்து எப்போது கிளம்பப் போகிறீர்கள்?

கா.சு.நாகராசன்

## எதிர்க்கட்சியா? எதிரிக் கட்சியா?

தலையங்கம்

## அடிப்படைவாதம் பொருளாதாரத்தை, நாட்டை வீழ்த்தும்!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஏப்ரல் 9, 2022

Weekly E-paper ● April 9, 2022


# அவர்களின் எதிரி ஆங்கிலம் இல்லை!

சுப.வீரபாண்டியன்

பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்கள் விலை ஏறிக் கொண்டே போகின்றன. சமையல் எரிவாயுவின் விலையும் இதுவரை காணாத விலைஉயர்வைக் கண்டிருக்கிறது.

நாடு முழுவதும் மக்களின் கோபமும் மெதுவாக ஏறுநிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. என்ன செய்யலாம்? ஆங்கிலம் வேண்டாம், இந்தி போதும் என்று சொல்லலாம். உடனே மக்கள் அதுபற்றிப் பேசுவார்கள். இந்தி எதிர்ப்பில் எரிபொருள் விலையேற்றம் அமிழ்ந்து போகும் என்று ஒன்றிய அரசு திட்டம் போட்டுச் செயல்படுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இது ஒரு திசைதிருப்பும் முயற்சியாக இருக்கலாம். இருந்தபோதிலும், நாம் இரண்டிலும் கவனமாக இருப்போம்! இரண்டையும் எதிர்ப்போம்!!


"பிரதமர் மோடி முடிவெடுத்து விட்டார். இப்போதே 70 விழுக்காடு ஒன்றிய அரசின் கோப்புகள் இந்தியில்தான் தயாராகின்றன. இனி 100 விழுக்காடும் இந்தியே ஆட்சி செய்யும். ஆங்கிலத்திற்கு வேலையில்லை" என்று அறிவித்துள்ளார் அமித்ஷா. ஆங்கிலத்திற்கு மாற்றாகத்தான் இந்தியே தவிர, உள்ளூர் மொழிகளுக்கு மாற்றாக இல்லை என்று ஒரு சமாதானத்தையும் கூறியுள்ளார்.

இதே சமாதானம்தான் கடந்த 75 ஆண்டுகளாகச் சொல்லப்படுகிறது. இங்கே ஆங்கிலத்தின் மீது ஏன் இவ்வளவு கோபம் என்ற வினாவிற்கு ஒரே ஒரு விடைதான் உள்ளது. அது ஆங்கிலத்தின் மீதான கோபம் இல்லை. ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்பவர்களின் வீட்டுப் பிள்ளைகள் எல்லோரும் ஆங்கிலம் அறிந்தவர்களாகவே இருக்கின்றனர். எங்களுக்கு மட்டும் ஆங்கிலம் இருக்கட்டும், உங்களுக்கெல்லாம் வேண்டாம் என்பதுதான் அதன் பொருள்!

ஆங்கிலம் ஒழிந்தால்தான், இந்தியும், இந்தி வழி சமஸ்கிருதமும், சமஸ்கிருதத்தின் வழி பார்ப்பனியமும் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். இது வெறும் மொழிப்போர் அன்று. இது ஒரு பண்பாட்டுப் போர்!

இன்று ஆங்கிலம் வேண்டாம், உங்கள் தாய்மொழியும், இந்தியும் இருக்கட்டும் என்று சொல்பவர்கள், நாளை, தாய்மொழியும் வேண்டாம், இந்தி மட்டுமே போதும் என்று சொல்வார்கள். அப்படிச் சொல்வார்கள் என்பதற்கு என்ன ஆதாரம்? இன்றைய வடஇந்திய மாநிலங்கள் பலவே இதற்கான ஆதாரங்களாக உள்ளன!

வடஇந்தியாவில் பல மாநிலங்களில், அம்மாநிலத் தாய்மொழிகளைப் புறந்தள்ளி விட்டு, இந்தி ஆட்சிக்கட்டில் ஏறிவிட்டது என்பது வெளிப்படை! சில எடுத்துக்காட்டுகளை வேண்டுமானால் பார்க்கலாம்.



உத்தரப்பிரதேச மாநிலமே, முழுக்க இந்தி பேசும் மாநிலமில்லை. அங்கு பல்வேறு தாய்மொழிகள் உள்ளன. வடமேற்கு உ.பி.யின் தாய்மொழி பிரஜ் பாஷா. தென்மேற்கு உ.பி.யின் தாய்மொழி புந்தேல்கண்டி. வடகிழக்கு உ.பி.யிலோ போஜ்பூரி தாய்மொழி. ஆனால் எல்லா மொழிகளையும் தின்றுவிட்டு, இந்தி அங்கு ஆட்சிமொழியாக இருக்கிறது.

உத்தர்காண்டில் இந்தியும், சமஸ்கிருதமும் ஆட்சிமொழிகள். ஆனால் அங்கு வாழும் பெரும்பான்மையான மக்களின் தாய்மொழி, கடுவாலி.

ஹரியானா மாநில மக்கள் பெரும்பான்மையோரின் தாய்மொழி ஹரியானி என்றபோதும் அங்கும் இந்திதான் ஆட்சிமொழி.

மிகப்பெரிய கொடுமை ராஜஸ்தானில் நடக்கிறது. அங்கே 5 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ராஜஸ்தானி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆனால் அம்மக்களின் மொழி அங்கு ஆட்சி மொழியாக இல்லை என்பது மட்டுமில்லை, எட்டாவது அட்டவணையில் கூட அந்த மொழி இடம்பெறவில்லை. இந்தியே ஆட்சிமொழியாக உள்ளது. மத்தியப் பிரதேசத்தில் இந்தி பலருக்குத் தாய்மொழியாக உள்ளது என்ற போதிலும், அங்கு உருது, அவதி, மால்வி, பகேலி போன்ற பல மொழிகள் உள்ளன. அவைகளுக்கு அங்கு எந்த மதிப்பும் இல்லை. சத்தீஸ்கரில், அவர்களின் சட்டிஸ்கரி மொழியை விட்டுவிட்டு இந்தியை ஆட்சிமொழி ஆக்கியுள்ளனர். ஜம்முவின் தாய்மொழி டோக்ரி. லடாக்கின் தாய்மொழி லடாக்கி. ஆனால் அங்கும் இந்தியே ஆட்சிமொழி என்று அண்மையில் அறிவித்துள்ளனர்.

எனவே இன்றைய அமித்ஷாவின் பேச்சு நாளை இந்தியா முழுவதும் உள்ள தாய்மொழிகளை அழிக்கும் முயற்சி! ஆங்கிலத்திற்கு மட்டும் எதிரானது என்று எண்ணி ஏமாந்துவிடக் கூடாது.

இவற்றையெல்லாம் தொலைநோக்கோடு முன்னுணர்ந்தே பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற நம் தலைவர்கள், தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிக் கொள்கையை விடாது வலியுறுத்தி வந்துள்ளனர். இன்றைய தலைவர் தளபதியும் அதில் உறுதியாக இருக்கிறார்.

நாம் ஒன்றும் ஆங்கில மோகம் உடையவர்களோ, ஆங்கில அடிமைகளோ இல்லை. இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளும் ஆட்சிமொழிகளாக இருக்க வேண்டும் என்பதே நம் கோரிக்கை. ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாக மட்டுமே கோருகின்றோம். நம் இந்த நிலைப்பாடு திடீரென்று தோன்றியதில்லை. 1963 ஆம் ஆண்டே அறிஞர் அண்ணா இந்தக் கோரிக்கையை, மாநிலங்களவையில் முன்வைத்தார். அதன்பிறகு, முரசொலி மாறன் 1982 அக்டோபரிலும், திருச்சி சிவா 2013 மார்ச்சிலும் முன்வைத்தனர். திமுகவின் வலியுறுத்தலை ஏற்றுத்தான் 2004 ஆம் ஆண்டு, அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவது குறித்து ஆராய, டாக்டர் சிட்டகாந்த் மகோபாத்ரா குழுவை அமைக்கப்பட்டது. நாம் தெளிவாகவே உள்ளோம்.

அவர்களும் சிலவற்றில் தெளிவாக இருக்கின்றனர். தமிழ்நாட்டில் திராவிடத்தை ஒழிக்காமல், ஆரியத்தை நுழைக்க முடியாது, ஆங்கிலத்தை ஒழிக்காமல் இந்தி, சம்ஸ்கிருத மொழிகளை நுழைக்க முடியாது என்று உணர்ந்துள்ளனர்.

அதனால்தான், திராவிட எதிர்ப்பு, ஆங்கில எதிர்ப்பு என இரண்டிலும், ஆரிய இந்துக்கள், தமிழ் இந்துக்கள் இருவரும் கைகோத்துச் செயல்படுகின்றனர்.

அந்தச் செயல்பாடுகளின் அடுத்தடுத்த முயற்சிகள்தான், அமித்ஷாவின் பேச்சுகள்! நாட்டின் வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல், மொழிப்போரை உருவாக்குவது நாட்டிற்கு நல்லதில்லை. இந்தியாவை இன்றைய இலங்கையாக ஒன்றிய அரசு ஆக்கிவிடக் கூடாது!

●

# கிண்டியிலிருந்து எப்போது கிளம்பப் போகிறீர்கள்?

**கா.சு. நாகராசன்**

ஆளுநர் என்பவர் மாநில அரசுகளின் நடவடிக்கைகளை கண்காணித்து ஒன்றிய அரசுக்கு அறிக்கை தருவதற்கான ஒரு கண்காணிப்பாளர். ஒன்றிய அரசின் பணியாளர். ஆனால் மாநில அரசுகளின் செலவு பட்டியலிலும், நிர்வாகச் சிக்கலிலும் ஒரு தேவையில்லாத ஆணி.

அரசியலமைப்புச் சட்டம் 152 முதல் 162 வரையிலான பத்து விதிகளில் ஆளுநர் நியமனம் அதிகாரம் பற்றிய அனைத்தும் சொல்லப்பட்டுள்ளன. ஆனால், ‘குலத்துக்கு ஒரு நீதி’ என்கிற மனுதர்மச் சட்டம்தான் இன்றைக்கு வரைக்கும் இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியலமைப்புச் சட்டத்தை விடவும் மேலானதாக இருக்கிறது.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக ( பாஜகவின் நான்முகம் தவிர்த்து) இயற்றிய நீட் விலக்கு தீர்மானம் ஏறக்குறைய 125 நாட்களுக்கும் மேலாக கிடப்பில் போடப்பட்டு கடந்த பிப்ரவரி 3ஆம் நாள் மறுபரிசீலனைக்கு என்று திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது ஆளுநர் திருவாளர் ரவி அவர்களால்.

நீட் மசோதா மட்டுமல்ல, கூட்டுறவு சங்கத் தலைவர்கள் பற்றிய தீர்மானம், பாரதியார் பல்கலைக்கழக பிரச்சனை, துணைவேந்தர்கள் நியமனம், TNPSC, அண்ணா பல்கலை இப்படி தமிழ்நாடு சட்டமன்ற தீர்மானங்கள் பல ஆளுநரின் கனிவான கவனத்திற்கு வரிசைகட்டி நிற்கின்றன. பாவம் ஆளுநருக்குத்தான் இவை பற்றி ஆலோசிக்க, முடிவெடுக்க நேரமே இல்லாமல் இருக்கிறார்.

சரி 156.14 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள படாடோபமான மாளிகை, அய்.ஏ.எஸ் தகுதியில் தனிச்செயலாளர், மூன்று துணைச் செயலாளர்கள், பாதுகாப்புப் படை உயர் தகுதியில் மூன்று பாதுகாப்பு அலுவலர்கள், இரண்டு கூடுதல் இயக்குனர்கள், மாளிகையெங்கும் சுற்றுச்சுழன்று கண்ணசைவிற்குப் பணிவிடை செய்யும் பணியாளர்கள், பாதுகாப்புக் காவலர்கள், சென்னையில் வெயிலின் தாக்கம் அதிகமானால் ஊட்டியில் சென்று குளுகுளு என ஓய்வெடுக்க அங்கேயும் ஒரு ராஜபவனம், வெள்ளைப் பணமாகவே பல லட்சம் மாத ஊதியம் என ஒரு வெள்ளைக்கார வைஸ்ராயைவிட வசதியான வாழ்க்கை அத்தனையும் தமிழ்நாட்டரசின் செலவில் என்று வளமாக வாழுகிற ரவியானவருக்கு அப்படி வேறு என்னதான் முக்கிய வேலை? என்று யாரும் கேட்டு விடக் கூடாது என்பதால்தான், அன்னார் சமஸ்கிருத கலாச்சாரக் கூட்டத்தில் போய் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்த்தி ராமராஜ்ஜியப் பெருமைகளை எடுத்துரைக்கிறார்.




பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் போய் தமிழ்நாடு அரசு நிராகரித்து விட்ட புதிய தேசிய கல்விக் கொள்கை குறித்து சிலாகித்துப் பேசி துணைவேந்தர்களையும் பத்திரிகையாளர்களையும் திகைக்கச் செய்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தான் நிர்வாகத் தலைவராக இருக்கிற தமிழ்நாடுதான் இந்திய மாநிலங்களிலேயே கல்வி - சமூக - பொருளாதாரத்தில் முன்னேறிய மாநிலம் என்கிற பெருமிதம் கொஞ்சமும் இன்றி, இந்தத் தமிழ்நாடுதான் தானும் தன் குடும்பமும் அதிஉயர் சொகுசு வாழ்வுவாழ செலவழிக்கிறது என்கிற நன்றி உணர்ச்சி சிறிதும் இன்றி, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராகச் செயல்படுகிறார். இதை அவரது பாசையில் சொல்வதானால் கர்ணனின் தேரை சகதியில் சிக்கவைத்த சல்லியனின் செயலுக்கு ஒப்பானது என்றுதான் செல்லவேண்டும். கூச்சம் சிறிதும் இன்றி ரவியானவர் பேசுகிறார், “மாநிலங்கள் வளர்வது ஆபத்து, தேசம் வளர வேண்டும்” என்னே ஆராய்ச்சி!

மேதகு ஆளுநர் அவர்களே, மாநிலங்களை ஒதுக்கிவிட்டு உங்கள் தேசம் எங்கே இருக்கிறது காட்டுங்கள் பார்க்கலாம் என்று இப்போது தமிழ்நாட்டின் சாமான்ய குடிமகன் கேள்வி கேட்க மாட்டானா?

மாநில அரசுகளுக்குத்தான் நிலப்பரப்பு இருக்கிறது, மக்கள் இருக்கிறார்கள்! உங்கள் தேசத்திற்கென்று எது நிலம்? ஏது மக்கள்?

மாநில அரசுகள்தான் வரிவசூல் செய்து திட்டங்களையும் சட்டங்களையும் இயற்றி மக்களிடத்திலே வாக்குகளைப் பெற்று ஆட்சி நடத்துகிறார்கள். உங்கள் தேசத்திற்கு என்று தனியே எது சட்டம்? ஏது வருவாய்?

எங்கள் மாநிலம் உங்களுக்கு உவப்பாய் இல்லை என்றால், உடன்பாடானதல்ல என்றால் அவ்வளவு சிரமத்தில் நீங்கள் இங்கே இருக்க வேண்டாம். நீங்கள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறி உங்கள் தேச நலனுக்குப் பணியாற்றச் செல்லலாம்!

கிண்டியிலிருந்து எப்போது கிளம்பப் போகிறீர்கள்? ஆளுநரே பதில் சொல்லுங்கள்!

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## எதிர்க்கட்சியா?எதிரிக் கட்சியா?

சட்டமன்றத்தில் ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் எதிர் எதிராக அமர்ந்து செயல்படுவார்கள்.

மாறாக எதிரிகளாகச் செயல்பட மாட்டார்கள். செயல்பட்டால் அது அரசியல் நாகரிகமாக இருக்காது.

மக்கள் பிரச்சனைகள் குறித்துப் பேசுவதும், விவாதிப்பதும், ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் வழங்குவதும், அரசு நடவடிக்கைகளில் குறை இருந்தால் அதைச் சுட்டிக்காட்டி நெறிப்படுத்த வேண்டியதும் எதிர்க்கட்சியின் கடமை.

குற்றங்களை மட்டுமே கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும், முடிந்தவரையில் மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் பொய்களைச் சொல்லிக் கொண்டு இருப்பது என்பது எதிர்க் கட்சியின் வேலையன்று.

ஆனால் அந்த வேலையைக் கச்சிதமாகச் செய்து கொண்டு இருக்கிறார் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி.

ஒன்றிய அரசின் 15ஆவது நிதி ஆணையம் கொடுத்த நிபந்தனைகளின் அடிப்படையில் சொத்துவரி உயர்த்தப்படுவதாகவும், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஆண்டுதோறும் சொத்துவரியை உயர்த்த நிதி ஆணையம் அறிவுறுத்தி உள்ளதாகவும் தமிழக அரசு அறிவித்துவிட்டு சொத்து வரியை சற்று உயர்த்தி உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாகச் சொத்து வரி வசூலிக்காத காரணத்தால் மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சிகளின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதிய நிதி ஆதாரமில்லை. நிதி வருவாய்க்கான வழிமுறையில் சொத்து வரியும் ஒன்று. அதையும் கூட முதல்வர் தயக்கத்தோடுதான் செய்திருக்கிறார் என்பதை அவரின் பேச்சு உணர்த்துகிறது.

இதற்குரிய ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைச் சொல்லாமல், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார் எடப்பாடியார்.

ஒன்றிய அரசு ஒவ்வொரு நாளும் பெட்ரோல், டீசல் விலைகளை ஏற்றிக் கொண்டே இருக்கிறது. மாதா மாதமும் சமையல் எரிவாயு விலையும் ஏறிக் கொண்டுதான் இருக்கிறது.

இது போன்ற பிரச்சனைகளை ஏன் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பேசுவதில்லை?

விளக்கம் தெளிவாக இருக்கிறது.

அரசியல் சட்ட விதிமுறைப்படி அவர் எதிர்க்கட்சித் தலைவராகச் செயல்படவில்லை. எதிரிக்கட்சியின் தலைவராகக் காட்சி தருகிறார்.

இது ஆரோக்கியமான அரசியலுக்கு அழகல்ல.

## ஏப்ரல் 14 - அம்பேத்கர் பிறந்தநாள்



1944 செப்டம்பர் 22 அன்று அன்றைய சென்னை மேயர் ம.இராதாகிருஷ்ணன் ஏற்பாட்டில், சென்னை ரிப்பன் கட்டிடத்தில் அண்ணல் அம்பேத்கருக்கு வரவேற்புக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ஷெட்டியூல்டு இனப் பேரவையின் தமிழக உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் :-

"வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் நாடாளுமன்ற முறையிலான அரசு இந்தியாவில் அமைக்கப்பட்டு விடுவதாலோ, அல்லது சுயராஜ்ஜியமோ, சுதந்தரமமோ அடைந்து விடுவதாலோ இங்கு எல்லோருடைய பிரச்சனைகளும், துன்பங்களும் தீர்ந்துவிடும் என்பதற்கு வரலாற்றில் ஆதாரம் எதுவும் இல்லை.

ஒரு குறிப்பிட்ட சாதியினர் கல்வி கற்கவும், வளம் பெறவும் உரிமை உண்டு என்றும், மற்ற சாதியினர் அடிமைகளாகப் பிறந்து அடிமைகளாகவே சாக வேண்டும் என்றும் கருதுகின்ற ஆளும் வர்க்கத்தின் கையில் இந்திய நாட்டின் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப் படுமானால், அந்த அரசு எந்த வகையிலும் சிறந்ததாக இருக்க முடியாது" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். ●





## 'நீட்'

### ஆளுநருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் !

நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வலியுறுத்தியும், ஆளுநரின் சர்வாதிகாரப் போக்கினைக் கண்டித்தும், எதிர்வரும் ஏப்ரல் 14, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளான அன்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் காலை 10 மணியளவில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது. களம் காணத் தோழர்களே, திரண்டு வாருங்கள்.

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# அடிப்படைவாதம்

## பொருளாதாரத்தை, நாட்டை வீழ்த்தும் !

**மதிவாணன்**

மக்களின் ஒருங்கிணைந்த கூட்டு வாழ்வே நாடாகும். நாடு என்பது வரைபடத்தில் இல்லை, அங்கு வாழும் மக்களின் உணர்ச்சிகளின் தொகுப்பே என்று கூறுவார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பல தரப்பட்ட மக்களின் தேவை மற்றும் அதற்கான உற்பத்தி, மிகை உற்பத்தியின் ஏற்றுமதி, பொருட்களின் இறக்குமதி எனப் பல முக்கிய செயல்பாடுகள் அந்த நாட்டின் பொருளாதாரப் போக்கைத் தீர்மானிக்கும்.

அடிப்படைவாதம் என்பது அந்தக் கூட்டு வாழ்விற்கு வேட்டு வைக்கும் சித்தாந்தமாகும்.



மக்களின் இயல்பான தேவைகள், மதம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பான பொருளியல் வாழ்வை வெகுவாகச் சிதைப்பதே அதன் நோக்கம்.

எடுத்துக்காட்டாக நமக்கு அருகில் இருக்கும் இலங்கையின் பொருளாதாரச் சிக்கலை எடுத்துக் கொள்ளலாம்.

சிறுபான்மையினரின் வாக்கு தேவையில்லை என்று கூறி ஆட்சியில் அமர்ந்த கோத்தபய ராஜபக்சே அரசை எதிர்த்து, தமிழர்கள் மட்டும் அல்ல சிங்களர்களும் போராடுகின்றனர்.

மக்களைப் பிளந்து அரசாண்டு விடலாம் என்று எண்ணிய அரசிற்கு எதிராகப் பதவியை விட்டு விலக வலியுறுத்தி அனைத்து மக்களும் இன்று ஒன்றாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்குப் பல்வேறு காரணங்கள் காட்டப்பட்டாலும், மக்களை ஒன்றாய்க் கருதி அரவணைக்காத அரசிற்கும், நாட்டிற்கு ஆதரவாக அனைத்து மக்களையும் ஒன்று திரட்ட முடியாமல் போனது முதன்மைக் காரணமாகக் கொள்ள வேண்டும்.

இக்கட்டான நேரங்களில் மக்கள் ஆதரவைத் திரட்டி நாட்டுக்காகச் சரியான திட்டங்களை வகுத்து, அதன்படி மக்களுடன் இணைந்து செயலாற்றக் கூட முடியாமல் அந்த நாடு திண்டாடி வருகின்றது. இன்னும் சொல்லப் போனால், அந்த அரசால் இப்பொருளாதார வீழ்ச்சியை வேடிக்கை மட்டுமே பார்க்க முடிகின்றது. அதை எதிர்த்துச் செயல்பட முடியவில்லை என்பதே களநிலை.

இலங்கையின் இந்தப் போக்கில் இருந்து இந்தியா பாடம் கற்க வேண்டும்.

இலங்கையைப் போலவே இந்திய ஒன்றியமும் சிறுபான்மையினர் (இஸ்லாமியர்கள், கிருஸ்துவர்கள்) வாக்குத் தேவையில்லை என்று, ஒரு பகுதி இந்தியாவைப் புறக்கணித்து விட்ட ஆட்சியாகவே உள்ளது. இந்த அரசு பதவி ஏற்றது முதல் நாட்டின் பொருளாதாரக் குறியீடு (ஜி.டி.பி) வீழ்ச்சியையே சந்தித்து வருகின்றது.

இதில் 2016-இல் இருந்து இந்திய ஒன்றியம் எந்த ஒரு காலாண்டிலும் முன்னேற்றத்தைச் சந்திக்கவில்லை. முற்றான வீழ்ச்சியையே சந்தித்து வருகின்றது. அதிலும் 2020-இல் வரலாற்றில் காணாத அளவாக -7.252 இந்தியா ஜி.டி.பி கணக்கிடப்படுள்ளது.

இந்திய ஒன்றிய துணைக்கண்டத்தில் பல தரப்பட்ட மக்களும் அவரவர் பண்பாட்டிற்கு ஏற்ப வாழ்க்கை முறையும் அதை ஒட்டிய பொருளாதாரம் என பன்முகத் தன்மை நிலவி வருகின்றது.

இதில் ஒரே நாடு ஒரே பண்பாடு, ஒரே மொழி, ஒரே ஒரே எனப் பல ஒரே-கள் கேட்டுவிட்டோம். இது பொருளாதாரத்தையும், நாட்டையும் வெகுவாகச் சிதைக்கும் வழியே அன்றி வேறில்லை. பல தரப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் தேவை மக்களுக்கு உள்ளது. இதில் உற்பத்தி செய்யும் மக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளும் மக்களின் வாங்கும் திறனையும் இந்த அரசின் கொள்கை வெகுவாகப் பாதிக்கிறது.

கொரனாவை மட்டும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் எனக் காட்ட இயலாது.

2016-இல் இருந்தே வெளிப்படையாகத் தெரிந்துவிட்ட ஒன்றே. பொருளாதாரத்திற்குப் பல விளக்கங்கள் கொடுத்தாலும், அது மக்களின் வாங்கும் திறனுடன் நேரடித் தொடர்புடையது. நாட்டில் உள்ள மக்களின் வாங்கும் திறன் அரசின் பாசிசக் கொள்கையால் பலவீனம் அடைந்திருக்கிறது.

இதே நிலை நீடித்தால் இலங்கையில் ஏற்பட்ட அரசுக்கு எதிரான போராட்டங்கள் இங்கும் ஏற்பட வாய்ப்பு இருப்பதை அரசு உணர்ந்து செயல்பட வேண்டும். அனைத்துத் தரப்பு மக்களின் எண்ணங்களுக்கும், வாழ்வாதாரத்திற்கும் முதன்மை கொடுப்பதே ஒரு நல்லரசுக்கு அடையாளம் என்பதை பா.ஜ.கவின் மோடி அரசு உணர வேண்டும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian